01.08.2017

தினத் தந்தி

**ஊட்டி அருகே மண் அரிப்பை தடுக்க தேயிலை செடிகளை நடவு செய்யும் விவசாயிகள்**



ஊட்டி அருகே சரிவான இடங்களில் மண் அரிப்பை தடுக்க தேயிலை செடிகளை விவசாயிகள் நடவு செய்து வருகின்றனர்.

**ஊட்டி,**

மலை மாவட்டமான நீலகிரியில் பெரும்பாலும் சரிவான பகுதிகள் காணப்படுகிறது. இதன் காரணமாக மழை காலங்களில் சரிவான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்அரிப்பு ஏற்படுகிறது. இதனால் வளமான மண் மழைநீரில் அடித்து செல்லப்படுகிறது. இதை தவிர்க்க விவசாயிகள் தங்களது நிலங்களில் படிமட்டங்கள் அமைத்து வருகின்றனர்.

இந்த படிமட்ட சரிவுகள் மழைக்காலங்களில் சரிந்து விழுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது. இதை தவிர்க்க கொதுமுடி , திருச்சிக்கடி, இடுஹட்டி, கெந்தொரை

உள்ளிட்ட பகுதிகளில் சரிவான இடங்களில் விவசாயிகள் தேயிலை நாற்றுகளை நடவு செய்து வளர்த்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயி குள்ளாகவுடர் கூறிய தாவது:-

நீலகிரியில் சரிவான பகுதிகளே அதிகமாக உள்ளன. சமதள பகுதிகள் குறைவு. சரிவான பகுதிகளில் மழை காலங்களில் மண் அரிப்பு ஏற்படுகிறது. இதனால் படிமட்டம் அமைத்தோம். தற்போது சரிவான பகுதிகளில் மண் அரிப்பு மற்றும் மண்சரிவு ஏற்படாமல் தடுக்க தேயிலை செடிகளை வளர்த்து வருகிறோம். தேயிலை செடிகளின் வேர் மண்ணை நன்றாக இறுக்கி பிடித்து கொள்ளும். இதனால் மண்சரிவு ஏற்படாது.

அதிக இடங்களில் தேயிலை செடிகள் நடுவதால் கூடுதல் வருவாய் ஏற்படுகிறது. ஆனால் ஒரு சில விவசாயிகள் தேயிலை செடிகளுக்கு பதிலாக கால்நடைகளுக்கு உணவாக பயன்படும் தட்டை புற்களை வளர்க்கின்றனர். இதனால் மாடுகளுக்கு தேவையான புற்கள் கிடைப்பதோடு , மண் அரிப்பும் தடுக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் மழை வாய்ப்பு**

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் சில பகுதிகளில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் ஆந்திர மாநில கடலோரப் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது தமிழகத்தின் கடலோர பகுதிகள் வழியாக கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் செங்கத்தில் 100 மிமீ மழையும், நீடாமங்கலம், காங்கேயம், வாணியம்பாடியில் 80 மிமீ மழையும், மன்னார்குடி, சேலம், பேராவூரணியில் 70 மிமீ மழையும் பெய்துள்ளது.